செய்தி வெளியீடு எண்:576 நாள்:07.08.2021

## செய்தி வெளியீடு

### முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் மனுக்கள் பெறப்பட்டுத் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.8.2021) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பெறப்பட்ட மொத்தம் 2,581 மனுக்களில் 1,170 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவற்றிலிருந்து 15 பயனாளிகளை நேரில் அழைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவர்களில் 6 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், 2 பயனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம், ஒரு பயனாளிக்கு சக்கர நாற்காலி, ஒரு பயனாளிக்குத் தையல் இயந்திரம், 2 பயனாளிகளுக்குத் திறன்பேசி, 2 பயனாளிகளுக்குக் காதொலிக் கருவி, ஒரு பயனாளிக்குப் பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி ஆகியவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறைன்பு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9